மாலை மலர்

16–1–2026 (வெள்ளிக்கிழமை)

# தற்கொலை எண்ணத்தை தவிர்ப்போம்; வாழ்க்கையை ரசிப்போம்!

இன்றைய இளம் தலைமுறையினர் சின்ன சின்ன பிரச்சினைகளை கூட தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு இளகிய மனம் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். இதன் காரணமாகவே படிப்பில் தோல்வி அடையும் போதும், காதலில் தோற்றுப் போகும்போதும் திடீரென உணர்ச்சிவசப்பட்டு தற்கொலை முடிவை எடுக்கிறார்கள்.

இந்த இரண்டு பிரச்சினைகள் மட்டுமின்றி தினம்தோறும் தாங்கள் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாமலும் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்.

அந்த வகையில் சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக மாணவி மெரினா கடற்கரை பகுதியில் கூவத்தில் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவரைப் போன்று இதற்கு முன்பும் பல மாணவ–மாணவிகள் பல்வேறு காரணங்களுக்காக தற்கொலை செய்து இருக்கிறார்கள். இதுபோன்று இளம் தலைமுறைகள் தற்கொலை செய்வதை தடுக்க பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும் தற்கொலை சம்பவங்களை தடுத்து நிறுத்த முடியவில்லை.

இயற்கையான மரணங்களே நம்மை சுற்றி இருப்பவர்களுக்கு மிகப்பெரிய வலியை கொடுக்கும்.இது போன்ற சூழலில் இளம் வயதில் இளைஞர்களும் இளம்பெண்களும் தற்கொலை செய்து கொள்வது அவர்களது குடும்பத்தினரை ஒட்டுமொத்தமாகவே நிலைகுலைய செய்து விடுகிறது.

உலகம் முழுவதும் 40 வினாடிக்கு ஒருவர் தற்கொலை செய்து கொள்வதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 8 லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்வதாகவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதைவிட 3 மடங்கு அளவுக்கு அதிகமாக தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்கொலை முயற்சியில் எடுபடுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் 15 வயது முதல் 29 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றனர். குடும்பப் பிரச்சினை, பொருளாதார சூழல் , தேர்வில் தோல்வி, சட்டரீதியான பிரச்சினைகள், உறவுகள் இழப்பு போன்றவையே தற்கொலை சம்பவங்களுக்கு முக்கிய காரணங்களாக அமைந்திருக்கின்றன.

தற்கொலையில் ஈடுபடுபவர்கள் குறிப்பிட்ட பிரச்சினைகளால் தவறான மனநிலைக்கு தள்ளப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக இனி இந்த உலகில் இருக்க வேண்டாம் என்கிற மனநிலைக்கு சென்று விடுகிறார்கள். அதுபோன்ற கடினமான காலகட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களின் மனநிலையை உணர்ந்து அவர்களது பிரச்சினைகளை உடன் இருப்பவர்கள் முழுமையாக கேட்டு அறிய வேண்டும். தற்கொலை எண்ணம் கொண்டவரை தனியாக விடுவதை தவிர்த்து, முழுமையாக அவருக்காகவே நேரம் ஒதுக்க வேண்டும்.

தற்கொலை எண்ணத்தை முழுமையாக மாற்றுவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் 24 மணி நேரமும் மனநல ஆலோசனை வழங்க 104 அவசர உதவி மையம் செயல்பட்டு வருகிறது. பல்வேறு தற்கொலை தடுப்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன. எனவே தற்கொலை எண்ணம் கொண்டவர்கள் தாங்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு தற்கொலை மட்டுமே தீர்வு அல்ல என்பதை உணர்ந்து அதிலிருந்து மீண்டு வர வேண்டும் என்பதே அனைவரின் ஆலோசனையாகவும் உள்ளது.

தற்கொலை எண்ணத்தில் இருப்பவர்களை அந்த மனநிலையில் இருந்து மாற்றுவதற்காக அவர்களை வேறொரு நல்ல சூழலுக்கு கொண்டு செல்வது உகந்ததாகும் என்று ஆலோசகர்களும் கருத்துக்களை கூறியிருக்கிறார்கள். உதாரணத்துக்கு அவர்களுக்கு மிகவும் பிடித்தமான இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் செல்வது அவர்களின் எண்ணத்தை மாற்றுவதற்கு உரிய மருந்தாக அமையும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

இது போன்ற தொடர் நடவடிக்கைகளால் தற்கொலை எண்ணத்தில் இருப்பவர்களின் மனதை கண்டிப்பாக மாற்ற முடியும் என்றும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருக்கிறது. பிரச்சினைகளை கையாள பழகிக் கொள்வோம்.தற்கொலை எண்ணத்தை முற்றிலுமாக மாற்றி வாழ்க்கையை ரசிக்க பழகுவோம்.



காரைக்குடி

## செட்டிநாடு பப்ளிக் பள்ளியில் பொங்கல் விழா

காரைக்குடி, ஜன. 16–

காரைக்குடி அருகே மானகிரியில் உள்ள செட்டிநாடு பப்ளிக் பள்ளியில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விழாவில் பள்ளி முதல்வர் உஷாராணி வரவேற்றார். பள்ளி தலைவர் குமரேசன் முன்னிலை வகித்தார். பள்ளி துணை தலைவர் அருண் குமார் மற்றும் பள்ளி நிர்வாகிகள் சாந்தி குமரேசன், ப்ரீத்தி அருண் குமார் ஆகியோர் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தனர். பள்ளி தலைவர் குமரேசன் விழாவை துவக்கி வைத்து பேசுகையில், பாரம்பரியமான பண்பாட்டு விழாக்களை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும், அதன்மூலம் இந்திய விழாக்களின் சிறப்பை உணர முடியும் என்றார். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக அயர்லாந்தை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுடன் பொங்கல் விழாவை கொண்டாடினர். மாணவர்கள் பாரம்பரிய உடை அணிந்து, மண் பானையில் பொங்கல் வைத்து மகிழ்ந்தனர். பெற்றோர்களுக்காக 'பயர் லெஸ் குக்கிங்' போட்டி நடத்தப்பட்டது. இதில் பெற்றோர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். கலை நிகழ்ச்சிகள் மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்களான உறி அடித்தல், கயிறு இழுத்தல் போன்றவற்றை மாணவர்களும், ஆசிரியர்களும் விளையாடி மகிழ்ந்தனர். முடிவில் துணை முதல்வர் பிரேம சித்ரா நன்றி கூறினார்.



மானாமதுரை

## மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் குருபூஜை விழா

சிவகங்கை, ஜன. 16–

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியேரேந்தல் விலக்கு பகுதியில் பஞ்சபூதேஸ்வரத்தில் பிரசித்தி பெற்ற மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில் உள்ளது. இதன் நிறுவனர் ஞான சேகர ஸ்வாமி கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஜீவசமாதி அடைந்தார். இங்கு தினந்தோறும் பூஜைகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் சுவாமியின் முதல் ஆண்டு குருபூஜை அனுஷ நட்சத்திரம் தினத்தில் நடைபெற்றது. காலையில் விக்னேஸ்வர பூஜையுடன் தொடங்கி திருவாசக சித்தர் கயிலை புனிதர் சிவ.தாமோதரனால் திருவாசக விண்ணப்ப பெருவிழா விழாவில் 30 பதிகங்கள் பாடப்பட்டது. அதை தொடர்ந்து குருபூஜை, மகேஸ்வர பூஜை, அன்னதானம் நடைபெற்றது. இதில் ஏராளமான சிவனடியார்கள், பக்தர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ மாதாஜி தலைமையில் ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா வேத தர்ம ஷேத்ரா டிரஸ்ட் மற்றும் பக்தர்கள் செய்திருந்தனர்.

# மாவட்டம்





அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் 22 காளைகளை அடக்கிய பாலமுருகனுக்கு காரும், சிறந்த காளையாக தேர்வு செய்யப்பட்ட மந்தை முத்து கருப்பன் காளையின் உரிமையாளருக்கு டிராக்டரையும் அமைச்சர் மூர்த்தி பரிசாக வழங்கினார்.

### அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில்

# 22 காளைகளை அடக்கிய மாடுபிடி வீரருக்கு கார் பரிசு

### களத்தில் நின்று ஆக்ரோஷம் காட்டிய மந்தை முத்து கருப்பன் காளை டிராக்டர் வென்றது



அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் வாடிவாசல் வழியாக துள்ளிக் குதித்த காளையை அடக்க முயன்ற வீரர்கள்.

மதுரை, ஜன.16–

தைப்பொங்கலை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டிகள் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். அந்த வகையில் முதலாவது ஜல்லிக்கட்டு அவனியாபுரத்தில் நேற்று நடைபெற்றது. அமைச்சர் பி.மூர்த்தி கொடியசைத்து போட்டியை தொடங்கி வைத்தார்.

இந்த ஜல்லிக்கட்டு விழாவில் பங்கேற்கும் காளைகளை பிடிக்கும் மாடுபிடி வீரர்கள் பதிவு செய்யும் பணி கடந்த இணையம் வழியே பதிவு மேற்கொள்ளப்பட்டது. இணையம் மூலம் பதிவு செய்த 909 மாடுபிடி வீரர்களில் 580 வீரர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. மருத்துவ பரிசோதனை மற்றும் ஆவண சரிபார்ப்புகளில் தகுதிநீக்கம் செய்யப்பட்ட 16 வீரர்கள் மற்றும் தாமே இடைநின்ற 3 வீரர்கள் நீங்கலாக மீதமுள்ள 561 வீரர்கள் ஜல்லிகட்டில் பங்கேற்க தகுதியானவர்களாக அறிவிக்கப்பட்டனர். தகுதியான அனைத்து மாடுபிடி வீரர்களும் போட்டியில் கலந்து கொண்டனர்.

ஒருசுற்றுக்கு 50 வீரர்கள் வீதம் பிரிக்கப்பட்டு மொத்தம் 11 சுற்றுக்களாக அனைத்து வீரர்களும் களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஒவ்வொரு சுற்றிற்கும் வீரர்களுக்கு வெவ்வேறு வண்ணங்களில் சீருடைகள் வழங்கப்பட்டன.

#### காளைகள்

இதில் பங்கேற்க பதிவு செய்திருந்த 1186 காளைகளில் கால்நடை மருத்துவ குழுவினரால் முன் அனுமதி வழங்கப்பட்ட 986 காளைகளுக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் 939 காளைகள் தகுதியானவையாக அறிவிக்கப்பட்டு எஞ்சிய 47 காளைகள் தகுதி நீக்கம் செய்யப்பட்டன.

இவ்வாறு தகுதியான காளைகளில் வாடிவாசல் வழியாக 939 காளைகள் மட்டும் அவிழ்த்து விடப்பட்டன.

காலை 7 மணிக்கு போட்டி தொடங்கிய உடன் கோவில் காளைகள் வாடிவாசல் வழியாக அவிழ்த்து விடப்பட்டன. அதனை யாரும் பிடிக்கவில்லை. அதனை தொடர்ந்து மற்ற காளைகள் அவிழ்த்து விடப்பட்டது. வாடிவாசலில் இருந்து துள்ளிக்குதித்து வந்த காளைகளை வீரர்கள் சுற்றி வளைத்து அடக்க முயன்றனர். சில காளைகள் வீரர்களுக்கு சவால் விடும் வகையில் களத்தில் நின்று விளையாடியது. கொம்புகளால் வீரர்களை காளைகள் பந்தாடின.

அத்தனை காளைகளும் தங்களது திறமையை காண்பிக்கும் வகையில் ஆக்ரோஷமாக வெளியேறி களமாடியது.

12 சுற்றுகள் நடந்த ஜல்லிக்கட்டு போட்டியில் மாடு பிடி வீரர்கள் 28 பேர், மாட்டின் உரிமையாளர்கள் 23 பேர், பார்வையாளர்கள் 9 பேர் என 60 பேர் காயமடைந்தனர் இதில் பலத்த காயமடைந்த 11 பேர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.இந்த நிலையில் ஜல்லிக்கட்டு போட்டியில் இறுதிச்சுற்று களமிறங்கிய காளை ஒன்று வாடிவாசல் இருந்து வெளியேறி வரும் போது கால் இடறி கீழே விழுந்தது. இதில் மாட்டின் முன்னங்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அந்த காளைக்கு கால்நடை குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

#### முதல் பரிசு கார்

அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் முதல் சுற்றில் இருந்து இறுதி வரை 22 காளைகளை அடக்கிய மதுரை மாவட்டம் வலையங்குளத்தை சேர்ந்த மாடுபிடி வீரர் பால முருகனுக்கு முதல் பரிசாக கார் வழங்கப்பட்டது. 17 காளைகளை அடக்கிய அவனியாபுரத்தை சேர்ந்த கார்த்திக்கிற்கு 2–வது பரிசாக மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது.

இதேபோல் களத்தில் நீண்ட நேரம் நின்று வீரர்களை பீதியடைய செய்த காளைகளுக்கு சிறந்த காளைக்கான பரிசு வழங்கப்பட்டது. அதன்படி களத்தில் களத்தில் நின்று சிறப்பாக விளையாடிய அவனியாபுரத்தை சேர்ந்த விருமாண்டி பிரதர்ஸ் என்பவரின் மந்தை முத்து கருப்பன் காளை சிறந்த காளையாக தேர்வு செய்யப்பட்டு டிராக்டர் வழங்கப்பட்டது.

அதேபோல் சிறந்த இரண்டாவது பரிசாக தங்க நாணயம் அவனியாபுரத்தை சேர்ந்த ஜெயகார்த்திக் என்பவரின் வேலு என்ற காளைக்கு வழங்கப்பட்டது. அதுமட்டுமின்றி 12 சுற்றுகளில் சிறப்பாக விளையாடிய காளைகளுக்கும், காளையர்களுக்கும் சைக்கிள், தங்க நாணயம், அண்டா. மிக்சி, கிரைண்டர், கட்டில்,பீரோ உள்ளிட்டவை வழங்கப்பட்டது.



ராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில்

## சமத்துவ பொங்கல் விழா

### கலெக்டர் சிம்ரன் ஜித் சிங் காலோன் பங்கேற்பு

ராமநாதபுரம், ஜன. 16–

ராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜித் சிங் காலோன் கலந்து கொண்டு உறிப்பானையை உடைத்து உரியடி போட்டியை துவக்கி வைத்தார். அதை தொடர்ந்து நடைபெற்ற கயிறு இழுக்கும் போட்டியிலும் கலெக்டர் பங்கேற்றார். இப்போட்டியில் கலெக்டரும், சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கமும் எதிரெதிர் திசையில் நின்று போட்டியிட்டு கயிறு இழுத்தது, அந்த பகுதியில் இருந்த பார்வையாளர்கள் மற்றும் நகராட்சி ஊழியர்களிடையே வரவேற்பை பெரும் விதமாக அமைந்தது. மேலும் அந்த விழாவில் நகர மன்ற தலைவர் கார்மேகம் கிராமிய கலைஞர்களோடு இணைந்து ஒயிலாடியதும் பார்வையாளர்களிடையே வரவேற்பு பெற்றது.

Edited and published by, C.SENTHILKUMAR for Malar Publications Ltd., 12-A, Periyar Bus Stand Road, Madurai -625 001. and printed by S.DEENADAYALAN, at Newsmen Associates Ltd .,BS2, Sidco Industrial Estate, K.Pudur, Madurai-625007.

# திருப்பரங்குன்றம் மலை கல்லத்தி மரத்திலிருந்த சந்தனக்கூடு பிறை கொடியை அகற்றிய போலீசார்

### தர்கா நிர்வாகம் எதிர்ப்பு

மதுரை, ஜன.16–

திருப்பரங்குன்றம் மலை மேல் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வலியுறுத்தி இந்து தமிழர் கட்சி நிறுவனர் ராம ரவிக்குமார் மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் திருக் கார்த்திகையன்று தீபத்தூணில் தீபம் ஏற்ற கடந்த 1–ந் தேதி உத்தரவிட்டார். ஆனால் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை காரணம் காட்டி தீபம் ஏற்ற மாவட்ட நிர்வாகம் மறுத்து விட்டது. இது தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தற்போது நிலுவை யில் இருந்து வருகிறது. அசாதாரண சூழ்நிலை காரணமாக டிச.2–ந் தேதி மலைக்கு செல்ல போலீசார் தடை விதித்தனர்.

இதனிடையே, கடந்த டிச.21–ந் தேதி மலை மேல் உள்ள சிக்கந்தர் தர்கா சந்தனக்கூடு விழாவிற்காக டிச.19–ந் தேதி முதல் அனைத்து மக்களும் மலை மேல் செல்ல போலீசார் அனுமதி வழங்கினர். தொடர்ந்து 21–ந் தேதி இரவு பலத்த போலீஸ் பாதுகாப்புடன் தர்கா நிர்வாகத்தின் சார்பில், கோவில் தலவிருட்சமான கல்லத்தி மரத்தில் தர்கா கொடியேற்றப்பட்டது. பின்னர் ஜன.6–ந் தேதி சந்தன கூடு விழா நடைபெற்றது. இந்நிலையில், கல்லத்தி மரத்தில் ஏற்றப்பட்ட தர்கா கொடியை அகற்றக்கோரி இந்து மக்கள் கட்சி மாவட்ட தலைவர் சோலை கண்ணன், இந்து தமிழர் கட்சி நிறுவனர் ராம ரவிக்குமார் மற்றும் பா.ஜ.க. நிர்வாகிகள் கோவில் நிர்வாகத்திடமும், போலீசாரிடமும் புகார் அளித்தனர். இதனிடையே நீதிமன்ற அவமதிப்பு வழக்கு கடந்த 9–ந் தேதி விசாரணைக்கு வந்த போது, போலீஸ் நிலையத்தில் புகார் அளித்த நிவாரணம் பெற நீதிபதி ஜி.ஆர். சுவாமி நாதன் உத்தரவிட்டார். மேலும், கொடியை அகற்றக் கோரி கோவில் நிர்வாகம் சார்பில் புகார் அளிக்கப்பட்டது. தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு கோவில் நிர்வாகத்தினர், வருவாய்த் துறையினர் மற்றும் போலீசார் கல்லத்தி மரத்திலிருந்த சந்தனக்கூடு பிறை கொடியை அகற்றினர்.

இந்நிலையில், கல்லத்தி மரத்திலிருந்து பிறை கொடி அகற்றப்பட்டதை எதிர்த்து தர்கா நிர்வாகம் சார்பில் போலீஸ் உதவி கமிஷனர் சசி பிரியாவிடம் புகார் அளிக்கப்பட்டது. அதில் ஆர்.டி.ஓ. தலைமையில் நடைபெற்ற அமைதி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையிலேயே கல்லத்தி மரத்தில் பிறை கொடி ஏற்றப்பட்டதாகவும், தற்போது அது அகற்றப்பட்டிருப்பதால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.



கலெக்டர் அலுவலகத்திற்கு வந்த மீனவரின் உறவினர்களை படத்தில் காணலாம்.

# கடலில் விழுந்து மாயமான மீனவரின் உடலை உடனடியாக மீட்க வேண்டும்

### உறவினர்கள் கலெக்டர் அலுவலகத்தில் மனு

ராமநாதபுரம், ஜன. 16–

பாம்பன் பகுதியிலிருந்து கடந்த 10–ந்தேதி மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் சரத்குமார் மற்றும் டைசன் ஆகிய இருவர் அதிவேக காற்று காரணமாக படகிலிருந்து தவறி விழுந்தனர். இதில் பாம்பன் பகுதியை சேர்ந்த சரத்குமார் என்பவரது உடல், 2 நாட்களுக்கு பிறகு தனுஷ்கோடி அருகே கரை ஒதுங்கியது.

மற்றொரு மீனவர் தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த டைசன் என்ற மீனவரின் உடல், இதுவரை மீட்கப்படாததால் மீனவர்கள் கவலையை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.இந்த நிலையில் அவரது உறவினர்கள் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகள், மீட்கப்படாத மீனவரின் உடலை உடனடியாக மீட்க வேண்டும், தகுந்த நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி பாம்பன் பகுதியில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. அதனைதொடர்ந்து அதிகாரிகளின் பேச்சு வார்த்தையை தொடர்ந்து சாலை மறியல்கைவிடப்பட்டது.

இந்த நிலையில் ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு வருகை தந்த கடலில் மூழ்கி மாயமான மீனவர்களின் மனைவிகள் மற்றும் குழந்தைகள், மீனவ சங்க பிரதிநிதிகள் உறவினர்கள் என 100–க்கும் மேற்பட்டோர் ஒரு மனு அளித்தனர். அவர்கள் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:– கடலில் மாயமாகி கண்டெடுக்கப்பட்ட மீனவர் சரத்குமாரின் குடும்பத்திற்கு தகுந்த நிவாரணம் வழங்க வேண்டும், மற்றொரு மீனவரின் உடலை தேடும் பணியை துரிதபடுத்த வேண்டும், மீனவரின் குடும்பத்திற்கு ரூ.20 லட்சம் நிதி உதவி மற்றும் அரசு வேலை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாயமான மீனவரின் மனைவிகள் மற்றும் குழந்தைகள் கண்ணீர் விட்டு கதறி அழுத சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மதுரை

ந.க.எண்.E.4055535/2025/டி

ரா.ராஜேந்திரன், த/பெ.ராமலிங்கம்,1/45 நடுத்தெரு, சொக்கலிங்கபுரம், பூச்சம்பட்டி, கச்சைகட்டி அஞ்சல், வாடிப்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்.

–மனுதாரர்

வருவாய் கோட்டாட்சியர்

–எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரர் ராஜேந்திரன் என்பவர் தனது தாயார் பாப்பம்மாள் என்பவர் கடந்த 03.12.1986ந்தேதி தனது வீட்டில் இறந்தார். அவர் இறந்த விபரத்தை பதிவு செய்ய தவறி விட்டார். மேற்படி இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனையிருந்தால் மதுரை கோட்டாட்சியர் அலுவலகத்தில் 15 தினங்களுக்குள் நேரில் ஆஜராகித் தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ரா. ராஜேந்திரன், மனுதாரர்

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், மதுரை உட்கோட்டம், மதுரை

ந.க.எண்.3869593/2025/ஜி

V.K.தேவேந்திரன், த/பெ.லேட்.குப்புச்சாமி, தாயார் பெயர் அரசி (எ) சரஸ்வதி, த/பெ.கட்டையன் (எ) கட்டயக்குடும்பன், கதவு எண்.1/1C ஏற்குடி, அச்சம்பத்து, மதுரை.

–மனுதாரர்

–எதிர்–

1.உயர்திரு. தாசில்தார் அவர்கள், அச்சம்பத்து, ஏற்குடி, மதுரை மேற்கு வட்டம், மதுரை

2. உயர்திரு. கிராம நிர்வாக அலுவலர் அவர்கள், அச்சம்பத்து, ஏற்குடி, மதுரை மேற்கு வட்டம், மதுரை

–எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி நம்பரில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுதாரரின் தாயார் அரசி (எ) சரஸ்வதி த/பெ.கட்டயக் குடும்பன் லேட். க/பெ.குப்புச்சாமி லேட். கடந்த 18.12.1982–ம் தேதி மேற்படி அச்சம்பத்து, ஏர்குடி கிராமத்தில் இறந்து விட்டார் என்பதற்கு இறப்பு சான்று வேண்டி மனு மதுரை, உட்கோட்டம் உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் தாக்கல் செய்யப்பட்டு அது ந.க.எண்.3869593/2025/ஜி நாள்.15.10.2025 ஆக நம்பரிடப்பட்டுள்ளது. இதில் ஆட்சேபனை ஏதும் இருப்பின் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. தவறினால் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

P.மீனாட்சி சுந்தரம், B.Com., B.L., M.எலிசபெத் கீதா, B.Sc., B.L., ML (TPA), PGDCA., PVn(Hindi)., அட்வகேட்ஸ், மதுரை

VTM லிமிடெட்

CIN : L17111TN1946PLC003270

பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர், தமிழ்நாடு — 626003

இணையதளம்: www.vtmill.com | மின்னஞ்சல்: complianceofficer@vtmill.com | தொலைபேசி: +91 452 2482595

நிர்வாகக் குழு கூட்ட முடிவுகள்

SEBI (LODR) Regulations, 2015 இன் விதி 30 மற்றும் பொருந்தும் பிற விதிகளின் படி, அத்துடன் 2013 நிறுவனச் சட்டத்தின் பொருந்தும் பிரிவுகள் மற்றும் தொடர்புடைய விதிகள் ஆகியவற்றின் படி, 2026ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் தேதி புதன்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு காணொளிக் காட்சி மூலம் நடைபெற்ற நிறுவனத்தின் நிர்வாகக் குழு கூட்டத்தின் முடிவுகள் பின்வருமாறு தெரிவிக்கப்படுகின்றன. நிர்வாகக் குழு பின்வருவனவற்றைப் பரிசீலித்து ஒப்புதல் அளித்துள்ளது.

1. நிறுவனத்தின் பங்குப் பத்திரங்களை நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட்டில் (NSE) பட்டியலிடுவதற்கான முன்மொழிவு மற்றும்

2. நிர்வாகக் குழுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, முன்மொழியப்பட்ட பட்டியலிடல் தொடர்பாக ஆவணங்கள் தயாரித்தல், இணக்க ஆய்வு, சான்றிதழ்கள் பெறுதல் மற்றும் NSE, SEBI மற்றும் பிற ஒழுங்குமுறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்புப் பணிகளில் நிறுவனத்திற்கு உதவுவதற்காக, பயிற்சி பெறும் நிறுவனச் செயலாளர்களான சி.எஸ். அமோக் திவான் மற்றும் சி.எஸ். ரோஹன் ஷிண்டே ஆகியோரை ஆலோசகர்களாக நியமித்தல்.

மேற்கண்ட தகவல்கள் BSE லிமிடெட் நிறுவனத்தின் இணையதளத்திலும் மற்றும் நிறுவனத்தின் இணையதளத்திலும் வெளியிடப்படும்.

நாள் : 14.01.2026

இடம் : சூலக்கரை, விருதுநகர்.

VTM லிமிடெட்டிற்காக,

கா.பிரியதர்ஷினி

நிறுவன செயலாளர்